[1984 பிப்ரவரி 22

(முற்பகல் 9-40)

திரு. ஏ. பாலுச்சாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் மேலூர், சமயநல்லூர் பக்கத்திலும் ரெயில்வே மேம்பாலம் இல்லாத காரணத்தால் இதுபோன்ற போக்குவரத்து இடைஞ்சல்கள் இருக்கின்றன. ஆகவே அவை களையும் இந்தத் திட்டத்தோடு சேர்த்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் மட்டுமல்ல, எல்லா மாவட் டங்களிலும் இது போன்ற நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் 326 இடங்களில் ரெயில்வே மேம்பாலம் கட்டவேண்டுமென்ற கோரிக்கையை ஏற்கெனவே நாம் மத்திய அரசிற்கு அனுப்பி இருக்கிறோம். ஆகவே ஒன்றல்ல, இரண்டல்ல, 326 இடங்களில் நாம் கேட்டிருக்கிறோம். அந்த அளவிற்கு ரெயில்வேயின் குறுக்கீடுகள் நம்முடைய சாலை யின் குறுக்கே வருவதால்தான் இதுபோன்ற நிலைமை ஏற்படு கிறது. இந்த அவையின் மூலம் ரெயில்வேத் துறையைக் கேட்டு கொள்வது, எவ்வளவு சீக்கிரமாக இந்தப் பணத்தை ஒதுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வோம்.

துடியலூர்-சின்னத்தடாகம் நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணி.

(*122 வினா 21336)—திரு. மா. சின்னராசு : மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், துடியலூர்-சின்னத் தடாகம் நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிக்காக மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளதா ?

(ஆ) இப் பணி எப்பொழுது முடிவுறும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : இப்பணிக்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அரசின் நிதி நிலை, வேலையின் முக்கியத்துவம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இப்பணியை மேற்கொள்வது சம்பந்தமாக ஆராயப் படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1984 பிப்ரவரி 22]

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் துடியலூர்-சின்னத்தடாகம் நெடுஞ்சாலை கடந்த ஐந்து ஆண்டுகளாக பஸ்போக்குவரத்து தடைபடுகிற அளவிற்கு மிக மோசமான நிலையில் இருக்கிறது. இது என்னுடைய சொந்த ஊருக்கு போகிற சாலை. இந்தப் பக்கத்திலே எதிர்க்கட்சிக் காரர்கள் நான் செய்யத் தவறியதாக சுட்டிக் காட்டி பிரச்சாரம் செய்வது இந்த ஒரே வேலையைத்தான். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அங்கு வந்து பார்த்து இருக்கிறார்கள். ஆகவே, அதைக் கருத்திலே கொண்டு இந்தப்பணியை விரைவிலே செய்து முடிக்க அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஊருக்குப் போகிற சாலை என்ற முக்கியத்துவம் மட்டுமல்லாது இது மிக முக்கியமான போக்குவரத்து சாலையாக இருந்துகொண் டிருக்கிறது. ஆகவே 9 கிலோ மீட்டர் அளவிற்கு நீளமுள்ள சாலை இன்றைக்கு மதிப்பீடுகள் தயார் செய்து 33 லட்சம் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே இரண் டாம் பகுதித் திட்டத்திலே எடுத்துக் கொள்ளலாமா என்பது அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதனுடைய அவசியத்தைக் கருதி இந்த நிதியாண்டிலேயே அதற்கான நிதியை ஒதுக்கித் தரவேண் டும். கோவை மாவட்டத்திலே இரண்டுவிதமான நிலை ஏற் பட்டது. ஒரு பக்கத்திலே வறட்சி இருந்தாலும், தொண்டா முத்தூர், சிறுவாணி அடிவாரப் பகுதியிலே பலத்த மழை பெய்து வெள்ளத்தால் சேதுப்பட்ட பகுதியாக இருக்கிறது. சாலைகள் எல்லாம் வெள்ளத்தின் காரணமாக மிகவும் பழுதடைந்து இருக்கின்றன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியாக எடுக் கப்படாவிட்டாலும், இந்தச் சாலைகளுக்கு சீர் செய்வதற்காக தனியாக நிதி ஒதுக்கித் தருவார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே வெள்ள நிவாரணப் பணிகளுக்காக கோவை மாவட்டத்திற்கு ஒரு கோடியே 72 லட்சம் ரூபாய் அரசின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இந்தச் சாலை யைப் பொறுத்தவரையில் தனியாகத்தான் எடுத்துச் செய்ய வேண்டிய சாலையாக இருக்கிறது. நிதி வசதி தேவையான அள விற்கு இருந்தால் கண்டிப்பாக இந்த ஆண்டிலேயே எடுத்துக் கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, துடியலூர் சின்னத்தடாகம் நெடுஞ்சாலையை சீர்செய்து கொடுக்கவேண்டுமென்று மாவட்ட அபிவிருத்தி மன்ற கவுன்சிலில் கூட இதுசம்பந்தமாக திரு. சின்னராசு அவர்களும், நானும் கேட்டும்கூட, அங்கே இருக்கிற அதிகாரிகள் சாலைபோடு வதற்கு தார் இல்லையென்று தொடர்ச்சியாக சொல்லிக் கொண்டு வருகிறார்கள். இதனால் தான் அந்தச் சாலை போடுகிற வேலை தடைபடுகிறதா என்பதை அறிய விரும்புவதோடு, மாவட்டம் முழுவதிலும் இப்படிப்பட்ட நிலமைகள் இருப்ப தால் முறையாக எல்லா ரோடுகளையும் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, தார் கிடைப்பது இல்லை என்ற நிலை இல்லை. கடந்த ஆண்டில், அதிலும் குறிப்பாக பிப்ரவரி, மார்ச் மாதங் களில் இப்படிப்பட்ட நிலை இருந்தது. அதற்கு முந்திய ஆண்டும் இப்படிப்பட்ட நிலை இருந்து வந்தது. ஆனால் இப் போது தார் கிடைப்பது இல்லை என்று இல்லை. தாரின் விலை அதிகமாகிவிட்டது. இப்போதுள்ள பிரச்சினை அது தான். அதற்காக மத்திய பெட்ரோலியம் அமைச்சருக்குக் கடிதம் அனுப்பி 1973 ஆம் ஆண்டில் எவ்வளவு விலை இருந்ததோ அந்த அளவிற்குக் கொடுக்கவேண்டும் என்று சொல்லி இருக் கிறோம். போக்குவரத்தில் முக்கிய பங்கு வகிப்பது சாலைகள் தான். ஆகவே, அந்தச் சாலைகளை கோர் செக்டாரிலே கொண்டு வரவேண்டும் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறோம், நெடுஞ்சாலைத் துறையைப்பற்றிப் பேசுகிறோம், ஆனால் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. சாலைகள் மூலமாகத் தான் எல்லாப் பணிகளும் நடைபெறுகின்றன. இந்த எண்ணம் நமக்கு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, அதை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, அதைக் கோர் செக்டாரிலே சேர்க்க வேண்டும் என்று கடிதம் எழுதி வற்புறுத்தி இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 123 முதல் 126 வரை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச் சரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.